මගේ අංකය
எனது இல.
My No. RG/IAB/COM/10

ඔබේ අංකය
உமது இல
Your No.

දුරකතන අංක
தொலைபேசி இல
Telephone Nos 2889488
2889489

ෆැක්ස් අංක
தொலை நகல்
Fax No 2889491
2889492

ඊ-මේල්
மின்னஞ்சல்
E-mail rgd@sltnet.lk

රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව
பதிவாளர் நாயகம் திணைக்களம்
REGISTRAR GENERAL'S DEPARTMENT

ප්‍රධාන කාර්යාලය
தலைமை அலுவலகம்
HEAD OFFICE

වෙබ් අඩවිය
இணைய தளம்
Web Site www.rgd.gov.lk

තැ.පෙ.අංකය.
த.பெ.இல.
P.O.Box No.

234/ඒ3
ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත
බත්තරමුල්ල.
234/ஏ3 டொன்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
234/A3
Densil kobbakaduwa Mawatha
Battaramulla


2016.10.26

දිනය/திகதி/Date ........ ........

**சுற்றுநிருப இலக்கம்** ; 10/2016

மாவட்ட பதிவாளர்கள் ( பிரதேச செயலாளர்கள்),

மத்திய பதிவேட்டறை உட்பட வலய அலுவலகங்களின் அனைத்து உதவி பதிவாளர் நாயகங்கட்கும்

அனைத்து காணிப் பதிவாளர் மற்றும் மேல்திக மாவட்ட பதிவாளர்கட்கு,

## <u>பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் மத்திய பதிவேட்டறை, வலய அலுவலகம், காணிப்பதிவகம் மற்றும் பிரதேச செயலகங்களில் உள்ள மாவட்ட பதிவாளர் பிரிவுகளில் உபயோகிக்கப்பட்ட பணம் ஏற்றுக் கொள்ளும் A 86 பற்றுச்சீட்டுப் புத்தகத்தினை அழித்தல்</u>

"ஆவணங்களினை அழித்தல்" என்னும் தலைப்பின் என்னல் தங்களுக்கு அனுப்பப்பட்ட 1987.02.11 ந் திகதிய சுற்றுநிருப இலக்கம் 2/87 இல் (5) மற்றும் அதில் (அ), (ஆ), (இ), (ஈ) என்னும் விடயத்தின் கீழ் உள்ள ஆலோசனைகளில் மாத்திரம் சுற்று நிருபத்தின் மூலம் கீழ் காணப்படும் விதத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

i. மேற்குறிப்பிடப்பட்ட அலுவலத்தில் உபயோகிக்கப்பட்ட A 86 பற்றுச் சீட்டு புத்தகத்தில் இறுதி பற்றுச்சீட்டினை வழங்கிய திகதி 2012.12.31 ந் திகதி அல்லது அதற்கு முனனைய தினமாயின் அந்த அடியிதழ் புத்தகத்தினை மாத்திரம் அழிப்பதற்கு இத்தால் அனுமதியினை வழங்குகின்றேன். அவ்வாறு அழிக்கப்படும் பொழுது அந்த அடியிதழ் புத்தகங்களின் முதல் இலக்கம் மற்றும் இறுதி இலக்கத்தினை வெவ்வேறாக குறிப்பிட்டு பட்டியலினை தயாரித்து எனக்கு அனுப்புவதற்கு நடவடிக்கையினை மேற்கொள்ளவும்.

ii. 2013.01.01 ந் திகதியின் பின்னர் உபயோகிக்கப்பட்ட A 86 அடியிதழ் புத்தகம் எனது இலக்கம் RG/IAB/COM/03 மற்றும் 2016.07.21 ந் திகதிய கணக்காய்வு வழிக்காட்டல் 2016(1) இல் இலக்கம் 1 இன் கீழ் i, ii, iii ன் மூலம் காட்டப்பட்ட முறையினை கடைப்பிடித்து கணக்காய்வினை மேற்கொள்ளு

கணக்காய்விற்கு உட்பட்ட காலத்தினுள் பணம் அறவீடுகளில் குறைகள் தவறுகள் மற்றும் ஒழுங்கீனங்கள் இல்லையாயின் மாத்திரம் பற்றுச்சீட்டு புத்தகத்தில் இறுதியாக பற்றுச்சீட்டினை வழங்கிய தினம் தொடக்கம் ஐந்து வருடகாலம் கடந்த பின்னர் உபயோகிக்கப்பட்ட அடியிதழ் புத்தகங்களின் (A 86) முதல் இலக்கம் மற்றும் இறுதி இலக்கத்தினை வெவ்வேறாக குறிப்பிட்டு பட்டியலினை தயாரித்து அவை கணக்காய்வு செய்யப்பட்டதற்கு மற்றும் கணக்காய்வு பரிசீலனை, வேறு ஒழுக்காற்று பரிசீலனை அல்லது விசாரணைகளுக்குரித்தற்றதென்பதற்கான சான்றிதழுடன் இரண்டு பிரதிகளுடன் எனது அனுமதிக்காக சமர்ப்பித்து என்னால் அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் மாத்திரம் அழிப்பதற்கு நடவடிக்கையினை மேற்கொண்டு அது பற்றி எனக்கு அறிக்கையிடவும்.

iii. மேலே i இன் விடயத்திற்கிணங்க 2012.12.31 ந் திகதிக்கு முன்னர் உபயோகிக்கப்பட்ட அடியிதழ் புத்தகம் மற்றும் ii விடயத்திற்கிணங்க அடிப்பதற்கு எனது அனுமதியினைப் பெற்ற அடியிதழ் புத்தகத்தினை அழிப்பதற்கு அல்லது கிழக்கு கடதாசி இணை சபைக்கு அல்லது அந்த சபையின் பிரதிநிதிக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கையினை மேற்கொள்ள இயலும் என்பதுடன் அவ்வாறு நடவடிக்கையினை மேற்கொள்ளும் பொழுது மாவட்ட பதிவாளர் (பிரதேச செயலகம்) அல்லது மத்திய பதிவேட்டறையின் உதவி பதிவாளர் நாயகம் அல்லது வலய பொறுப்பு உதவி பதிவாளர் நாயகத்தின் மேற்பார்வையின் கீழ் நிகழ்த்தப்பட்ட அழிப்பாக அடியிதழ் புத்தகத்தில் (G.A.N.20) மற்றும் ஆவணம் அழித்தல் புத்தகத்தில் குறிப்பினை இடல் வேண்டும்.

iv. மேற்குறிப்பிடப்பட்ட விதத்தில் அடியிதழ் புத்தகத்தினை அழிக்கும் பொழுது கணக்காய்வு பரிசீலனை , வேறு ஒழுக்காற்று பரிசீலனை அல்லது விசாரணைக்குரிய அடியிதழ் புத்தகம் அழிக்கப்படாது அந்த நடவடிக்கைகள் அனைத்தும் முடிவுறும் வரை உரிய மத்திய பதிவேட்டறையின் உ.ப.நா, வலய பொறுப்பு உ.ப.நா, காணிப்பதிவாளர் அல்லது மேலதிக மாவட்ட பதிவாளரின் தனிப்பட்ட பாதுகாப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

v. இந்த சுற்றுநிருபம் கிடைத்தமை பற்று தயவு செய்து அறியப்படுத்தவும்.

ஒப்பம்; ஈ.எம்.குணசேகர,

பதிவாளர் நாயகம்

பிரதிகள்

| | | |
|---|---|---|
| பிரதான அலுவலகத்தின் அனைத்து பதவிநிலை அலுவலர்கட்கும் | - | தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைக்காகவும் |
| பிரதான உள்ளக கணக்காய்வாளர், உள்நாட்டலுவல்கள் அமைச்சு | - | தகவலுக்காக |
| உள்ளக கணக்காய்வாளர், மாவட்ட செயலகம் ..................................... | - | தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைக்காகவும் |
| கணக்காய்வதிபதி, பதிவாளர் நாயகம் திணைக்களம் | - | தகவலுக்காக |